பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

*11 02 2026 WEDNESDAY 7 15 PM*

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஜவுளிப் பூங்காக்களை ஏற்படுத்துவதற்காக, மாநில அரசுகளுக்கு தேவையான உதவிகளை வழங்க மத்திய அரசு தயாராக உள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

2. வாக்கு வங்கி அரசியலுக்கு மட்டுமே காங்கிரஸ் முக்கியத்துவம் அளிப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் குற்றம் சாட்டியுள்ளார்.

3. தமிழகம், மேற்குவங்கம், கேரளா, அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் சட்டப்பேரவை தேர்தலுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

4. போர்ச்சுக்கல் உள்துறை அமைச்சர் செல்வி. *Maria Lucia Amaral* பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

5. புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

ஜவுளிப் பூங்காக்களை ஏற்படுத்துவதற்காக, மாநில அரசுகளுக்கு தேவையான உதவிகளை வழங்க மத்திய அரசு தயாராக உள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்

மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்த திட்டத்தில் இணைய முன்வரும் மாநில அரசுகளுடன் இணைந்து பணியாற்ற மத்திய அரசு தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவ சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டிய அவர், இதன் மூலம் அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று கூறினார்.

திறன் மேம்பாட்டிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

>>>>><<<<<

வாக்கு வங்கி அரசியலுக்கு மட்டுமே காங்கிரஸ் முக்கியத்துவம் அளிப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் குற்றம் சாட்டியுள்ளார்.

குவஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிஜேபியைப் பொறுத்தவரை வளர்ச்சிக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிப்பதாக தெரிவித்தார்.

மத்தியில், காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, வடகிழக்கு மாநிலங்களை மேம்படுத்த எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று அவர் குறை கூறினார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்ற பின்னர், வடகிழக்கு மாநிலங்களில் இதுவரை இல்லாத அளவிற்கு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகம், மேற்குவங்கம், கேரளா, அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரியில் சட்டப்பேரவை தேர்தலுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிந்து கொள்ளும் வசதியுடன் கூடிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து, வாக்களர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதில் இதுவரை ஒரு லட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் பங்கேற்றதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் நோக்கில், இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

மக்களவையில் EPSTEIN file விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தவறான குற்றச்சாட்டுகள் தெரிவிப்பதை திரு. ராகுல் காந்தி வாடிக்கையாக கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

இந்த ஃபைல் விவகாரத்துடன், தம்மை தொடர்புபடுத்தி பேசுவது அடிப்படை ஆதாரமற்றது என்றும் திரு. ஹர்தீப் சிங்புரி தெரிவித்தார்.

>>>>><<<<<

மேற்குவங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு எதிரான தடைகளை நீக்க, மாநில அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

இன்று கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பான உச்சநீதிமன்ற உத்தரவையும் சுட்டிக்காட்டினார்.

அரசு ஊழியர்களின் நலன்களை பாதுகாக்க, மேற்குவங்க அரசு தவறிவிட்டதாகவும் திரு. புபேந்தர் யாதவ் குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

பாதுகாப்பு அதிகாரிகளுக்கான குடியிருப்பு ஒதுக்கீட்டிற்கான நெறிமுறைகளை மத்திய அரசு விரிவுபடுத்தியுள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி, பாதுகாப்பு அதிகாரிகளின் பெற்றோர்களுக்கும், அவர்களது பராமரிப்பில் உள்ள உடன்பிறந்தவர்களுக்கும், அவர்கள் சட்டபூர்வமாக தத்தெடுத்த குழந்தைகளுக்கும் ஒதுக்கீட்டு வசதி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நாட்டின் வளர்ச்சிக்கான தொலைநோக்குப் பார்வையின் மத்திய பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளதாக பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி கூறியுள்ளார்.

கேரள மாநிலம், கொல்லத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதே இந்த பட்ஜெட்டின் முக்கிய நோக்கம் என்றார்.

அனைத்து துறைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான அம்சங்கள் பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பதாகவும் திரு. சுரேஷ் கோபி தெரிவித்தார்.

>>>>><<<<<

கனடா துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இதில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த துயரமான தருணத்தில், கனடாவுடன் இந்தியா துணைநிற்பதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் 9 பேர் உயிரிழந்ததாகவும், 25 பேர் காயமடைந்ததாகவும் கனடா அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

கல்வி, வேளாண் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு, உத்தரபிரதேச அரசின் நிதிநிலை அறிக்கையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில நிதியமைச்சர் திரு. சுரேஷ் கன்னா கூறியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை தாக்கல் செய்து அவர் பேசினார்.

நடப்பு நிதியாண்டை விட, 12 புள்ளி இரண்டு சதவீதம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிதி நிர்வாகத்தை செம்மைப்படுத்த வேண்டும் என்பதில் உத்தரபிரதேச அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு. சுரேஷ் கன்னா கூறினார்.

>>>>><<<<<

ராஜஸ்தானில் இரண்டு சூரியமின்சக்தி பூங்காக்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக அம்மாநில துணை முதலமைச்சர் திருமதி. தியா குமாரி கூறியுள்ளார்.

அம்மாநில சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து அவர் பேசினார்.

இந்த சூரியமின்சக்தி பூங்காக்கள் மூவாயிரம் கோடி ரூபாய் செலவில் Bikanar மற்றும் Jaisalmer-ல் அமைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அனைத்துக் குடியிருப்புகளுக்கும் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்படவுள்ளதாக கூறிய அவர், இதற்காக ஆறாயிரத்து 200 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நகர்ப்புறங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கான திட்டங்களுக்காக, 2 ஆயிரத்து 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் திருமதி. தியா குமாரி கூறினார்.

>>>>><<<<<

பஞ்சாபில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள முதலீட்டாளர் உச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு. பகவந்த் மான் இன்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

சண்டிகரில் நடைபெற்ற இந்த உயர்நிலை ஆலோசனை கூட்டத்தில், மாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பஞ்சாபின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த மாநாடு மேலும் உத்வேகம் அளிக்கும் என்று முதலமைமைச்சர் இந்த கூட்டத்தில் தெரிவித்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

புதுதில்லியில் 3 புதிய மெட்ரோ வழித்தடங்களை அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், 12 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் இந்த வழித்தடங்கள் அமைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

16 கிலோமீட்டர் தொலைவு அமையவுள்ள இந்த வழித்தடங்கள், 13 ரயில் நிலைங்களை கொண்டதாக இருக்கும் என்றும் திருமதி. ரேகா குப்தா கூறினார்.

>>>>><<<<<

போர்ச்சுக்கல் உள்துறை அமைச்சர் செல்வி. Maria Lucia Amaral பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

கடந்த மாதம் Kristin புயல் அந்நாட்டை தாக்கிய போது மீட்பு பணிகள் விரைவாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

புரோ ஹாக்கி லீக் போட்டியில் இந்தியா இன்று பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

Rourkela-வில் நடைபெறவுள்ள இப்போட்டி, இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

>>>>><<<<<

ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Anish Bhanwala வெண்கலப் பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 25 மீட்டர் பிரிவில், அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>><<<<<

உலக பாரா கிராண்ட் ஃப்ரீ தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sumit Antil தங்கப்பதக்கம் வென்றார்.

துபாயில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில் இந்தியா, 5 தங்கம், 3 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

>>>>><<<<<

உலக பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Promod Bhagat காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பஹ்ரைனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-8, 21-6 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் Thomas Numitor-ஐ வென்றார்.

*மற்றொரு ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் உமேஸ் விக்ரம் குமார் 21-9, 21-14 என்ற செட்கணக்கில் ஸ்பெயினின் Simon Cruz-ஐ வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.*

*கலப்பு இரட்டையர் பிரிவில், Mandeep Kaur - Chirag Baretha இணையும், துளசிமதி முருகேசன் - Nitesh Kumar இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.*

***>>>>>END<<<<<***